செய்தி வெளியீடு எண். 53-2018 நாள்: 14.12.2018

# விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து மருத்துவமுறைகளையும் தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் முறைப்படுத்துதல் சட்டம் 1997 மற்றும் விதிகள் 2018-ன்கீழ் சுகாதாரத்துறையில் பதிவு செய்ய வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்வதற்கும் முறைப்படுத்துவதற்கும் வழிவகை செய்யும் பொருட்டும், அம்மருத்துவ நிறுவனங்களால் குறைந்த அளவு தரத்திலான வசதிகள் மற்றும் சேவைகள் அளிக்கப்படுவதற்கு வழிவகை செய்யும் பொருட்டு தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் முறைப்படுத்துதல் சட்டம் 1997 மற்றும் விதிகள் 2018 (Tamil Nadu Clinical Establishment Act (Regulation) 1997 and rules 2018) உருவாக்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் விழுப்புரம் மாவட்டத்தில் செயல்படும் அரசு மருத்துவமனைகள், அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகள், கிளினிக், பாலிகிளினிக், மகப்பேறு மருத்துவமனைகள், பல் மருத்துவமனைகள், மருத்துவ பரிசோதனை ஆய்வகங்கள், எக்ஸ்-ரே மையம், அல்ட்ரா சோனோகிராம், சி.டி. ஸ்கேன் மற்றும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன், இ.சி.ஜி., இ.இ.ஜி மற்றும் ட்ரெட்மில் எகோகார்டியோகிராபி அனைத்து மருத்துவமுறைகளையும் தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் முறைப்படுத்துதல் சட்டம் 1997 மற்றும் விதிகள் 2018-ன் கீழ் சுகாதாரத்துறையில் பதிவு செய்ய வேண்டும்.

மேலும் இந்திய மருத்துவ முறை மற்றும் ஓமியோபதி மருத்துவ முறைகளான ஆயுர்வேதம், யோகா, இயற்கை மருத்துவம், யுனானி, சித்த மருத்துவம் போன்ற தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து மருத்துவ முறைகளையும் சுகாதாரத்துறையின் கீழ் பதிவு செய்ய வேண்டும்.

மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தினை இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் Competent Authority –CEA, Villupuram எனும் பெயரில் ரூ.5000/-க்கான வரைவோலை இணைத்து விழுப்புரம் நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகத்தில் 31.03.2019 தேதிக்குள் விண்ணப்பித்து பதிவு செய்து கொள்ள வேண்டும்.

பதிவு செய்யாமல் மருத்துவ சிகிச்சைகள் மேற்கொள்ளும் மருத்துவ நிறுவனங்கள் மீது தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் முறைப்படுத்துதல் சட்டம் 1997 மற்றும் விதிகள் 2018-ன்படி சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு 04146-223628 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.